**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 579** **நாள்: 16.10.2026**

**மாண்புமிகு பொதுப்பணி மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. ஆதவ் அர்ஜூனா அவர்கள், ஜல்லடியான்பேட்டை, காந்தி தெருவில் ரூ.1.20 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட இறகுப்பந்து உள்விளையாட்டு அரங்கத்தினை இன்று பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.**

**வடகிழக்குப் பருமழையினை முன்னிட்டு பள்ளிக்கரணை சதுப்பு நிலத்திலிருந்து தங்குதடையின்றி மழைநீர் செல்வதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

இன்று (16.10.2026) மாண்புமிகு பொதுப்பணி மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. ஆதவ் அர்ஜூனா அவர்கள், பெருங்குடி மண்டலம், வார்டு-191க்குட்பட்ட ஜல்லடியான்பேட்டை, காந்தி தெருவில் ரூ.1.20 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட இறகுப்பந்து உள்விளையாட்டு அரங்கத்தினைப் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்துப் பார்வையிட்டு, மாணவர்களுடன் கலந்துரையாடி, பின்னர் அவர்களுடன் விளையாடினார். இதனைத் தொடர்ந்து, இவ்வளாகத்தில் மரக்கன்றினை நட்டார்.

இந்த இறகுப் பந்து உள்விளையாட்டு அரங்கம் 81.74 சதுர மீட்டர் பரப்பளவில் உடற்பயிற்சி உபகரணங்களுடன் ரூ.1.20 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், இதன் வெளிப்பகுதியில் திறந்த வெளி உடற்பயிற்சிக் கூடம் இளைஞர்கள் உள்ளிட்ட மக்கள் பயன்பாட்டிற்கு அமைக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், 200 அடி ரேடியல் சாலை பகுதியில் உள்ள பள்ளிக்கரணை சதுப்பு நிலத்திலிருந்து மழைநீர் தங்குதடையின்றி நெடுஞ்சாலைத்துறையின் 16 சிறு கால்வாய்கள் வழியாக செல்வதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, இப்பகுதியில் தொடர் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு தீவிர முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வெள்ள மீட்பு நிவாரண மையங்களும், சமையல் கூடங்களும் தேவையான அனைத்து வசதிகளுடன் தயார் நிலையில் உள்ளது. மிகத் தாழ்வான பகுதிகளில் தேங்கும் மழைநீரை வெளியேற்ற

மோட்டார் பம்புகள் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. பல்வேறு சேவைத் துறை அலுவலர்களும்மழையினை முன்னிட்டு போர்க்கால அடிப்படையில் உரிய முன்னெச்சரிக்கை மற்றும் மீட்பு நடவடிக்கைகளை ஒருங்கிணைந்து மேற்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

இந்நிகழ்ச்சிகளில், சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஈ.சி.ஆர். ப. சரவணன், மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி. எஸ். சமீரன், இ.ஆ.ப., தெற்கு வட்டார துணை ஆணையாளர் திரு. அஃதாப் ரசூல், இ.ஆ.ப., மாமன்ற உறுப்பினர் திருமதி.ஜெ.எல். லட்சுமி, மண்டல அலுவலர் திரு.ஹார்டின் ரோசாரியோ, மற்றும் நீர்வளத்துறை, நெடுஞ்சாலைத் துறை, மாநகராட்சி அலுவலர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள்தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**